1992 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி 'என்ஃபோர்ஸ்மெண்ட் விங்' -செயலாக்கப் பிரிவு, சென்னைக்கு மட்டும் அளித்திருக்கிறோம், தொடர்ந்து இதிலே ஏற்படுகிற பலா பலன்களை யோசித்து, கோவை, திருச்சி, மதுரை ஆகிய வற்றுக்குச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞான சேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் வணிக வரி சோதனைச் சாவடிகள் கூடாரங்களாக, கூரைகளால் வேயப்பட்டதாக இருக்கின்றன. அந்த இடங்களிலே கொண்டு போய் விலை உயர்ந்த ஒயர்லெஸ் கருவிகளை வைக்க முடியாது; ஆகவே அந்த கருவிகளை வைப்பதற்காக நல்ல கட்டிடங்களை முதற்கண் இந்த அரசு கட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லுகிற போது தமிழ்நாடு பூராவும் இது கொண்டு வரப்படவில்லை, சென்னையைச் சுற்றியிருக்கிற பெர்மெனன்ட் பில்டிங் இருக்கிற சோதனைச் சாவடிகளில் தான் கொண்டு வருகிறோம் என்றும் தெரிவித்திருக்கிறேன். இந்த ஒயர்லெஸ் கருவிகளை பறக்கும் படைகளுக்குக் கொடுக்கிறோம். ஆகவே இது பாதுகாப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 419 டாக்டர் அ. ஸ்ரீதரன்,- மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்,

419—

ஈழவ இனத்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கல்.

*5795—டாக்டர் அ. ஸ்ரீதரன் :
மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வால்பாறையில் வாழும் ஈழவ இனத்தவர்களுக்கு ஈழவ இனத்தைச் சார்ந்தவர் என்ற சாதிச் சான்றிதழ் வழங்க மறுக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

சத்யமேவ ஜயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்தில் வாழும் 'எழுவா' என்ற இனத்தவரும், மாநிலம் முழுவதிலுமுள்ள இல்லத்துப் பிள்ளைமார், இல்லுவர், எழுவர் மற்றும் இல்லத்தார் ஆகிய இனத்தவர்களும் தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளபடியால், பிற்படுத்தப்பட்டோருக்கான சாதிச் சான்று பெற்று அவர்களுக்கான சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். 'ஈழவ' என்ற சாதி இம்மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படவில்லையாதலால் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான சாதிச் சான்று வழங்க இயலாது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தாலுக்காவில் வாழ்கின்றவர்களில் 98 சதவிகிதத்தினர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் பேரவைத் தலைவர் அவர்களுடைய ஊரிலிருந்தும், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய ஊரிலே இருந்தும் கூட அங்கே வந்து தொழில் செய்கிறார்கள். இவர்களுடைய பண்பாடும், கலாச்சாரமும் அந்த இனத்தைச் சார்ந்தவர்களைப் போலவே இருக்கின்றன. ஈழவ இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே பெரு வாரியாக இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்து தான் ஈழவ சான்றிதழை வாங்க வேண்டும் என்று அங்கேயுள்ள வட்டாட்சியர்கள், நாங்கள் கேட்டபோது, சொன்னார்கள். ஆகவே கோவை மாவட்டத்தினுடைய வால்பாறை தாலுக்காவிலும் ஈழவ மக்கள் வாழ்கின்றனர் என்பதைக் கருத்திற் கொண்டு, அவர்களுடைய பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கும் அந்த சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதையும் கருத்திற் கொண்டு இந்த சான்றிதழை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவினுடைய பரிந்துரையின்படி கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்தில் வாழும் 'எழுவா' என்ற இனத்தவரும், மாநிலம் முழுவதிலுமுள்ள இல்லத்துப் பிள்ளைமார், இல்லுவர், எழுவர், மற்றும் இல்லத்தார் ஆகிய

இனத்தவர்களும் தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆனைமலைப் பகுதியில், வால்பாறை பகுதியில் இப்படிப்பட்ட இனத்தவர்கள் வாழ்கிறார்கள் என்று குறிப்பிடு கிறார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களை தனியாக அரசுக்கு அனுப்பினால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழவ இனத்தினுடைய பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த பள்ளியாண்டு துவங்குவதற்கு முன்னால் அரசாணையைப் பிறப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு குழுக்கள் அமைக்கப் பெற்று, அவைகளின் பரிந்துரைகளின் மீதுதான் இந்த சாதிப் பட்டியல் அரசால் வெளியிடப்பட்டிருக்கிறது, ஆகவே விவரங்களை அரசுக்கு அனுப்பினால் அரசு மிக விரைவாக பரி சீலித்து விரைவிலே முடிவை எடுக்கும், இன்னும் ஒரு குறிப்பைச் சொல்லிவிடுகிறேன். வெளி மாநிலங்களிலே இருந்து இங்கே வந்து வாழுகிறவர்கள், அவர்கள் அந்த மாநிலத்திலே பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலும், இந்த மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டவர்களாகக் கருதமாட் டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழவ சமுதாயம் கேரளாவிலே ஒன்னாவது சாதி. அவர்கள் தான் அங்கே அதிகமாக இருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே கூட 15 ஆயிரம் குடும்பங்கள்— ஓட்டர்ஸ்— இருக்கின்ற சமுதாயம். அதை மோஸ்ட் பேக்வேர்ட் ஆக ஆக்க வேண்டு மென்று கேட்டு இருக்கிறார்கள். அங்கே பிற்படுத்தப்பட்டவர் களாக சேர்க்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த சமுதா யத்தை சேர்ந்தவர்கள் தமிழகத்தில் எல்லா பகுதிகளிலேயும் இருப்பார்கள். சென்னையிலும் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ''பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் கள்'' என்று சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் அமைச் சரே சொன்னார். பிற மாநிலத்திலே இருந்து இங்கே வந்து இருந்தால், இங்கே அது தரப்படமாட்டாது என்று சொல்லி இருக்கிறார்,

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஒரு ஆணையின்படி வெளி மாநிலத்திலே இருந்து இங்கே வந்து வாழ் கிறவர்கள், அங்கே பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், இங்கே பிற்படுத்தப்பட்டவர்களாகக் கருதமாட்டார்கள் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் பிற்பட்டோர் நலக் குழுவினிடத்திலே சாட்சியம் அளித்த போது இல்லத்துப் பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், இரண்டாம் பிற்பட்டோர் நலக் குழுவை சந்தித்து சாட்சியம் அளிக்கும் போது, தாங்கள் ஈழவர், பணிகர், இல்லத்தார், இல்லத்துப் பிள்ளைமார் என வெவ்வேறு பெயர்களிலே அழைக்கப்படுவதாக வும் அவர்களுக்குள் கொள்வினை கொடுப்பினை உண்டு என்றும் தெரிவித்து, இவர்கள் கேரளாவைச் சார்ந்த ஈழவர் களும் தாங்களும் ஒரே இனமே எனக் கூறினர். அதனாலே தான் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஈழவர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்க வில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால் பாறை பகுதியிலே வாழ்கிற மக்களைப் பற்றித் தெரிவிக்கிறார் கள். அவர்களைப் பற்றிய முழு விவரத்தையும் அரசுக்கு அறி வித்தால், அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 420, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, —மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

உறுப்பினர் இருக்கையில் இல்லை. @

வினா எண் 421, திரு. தி. சாத்தையா— மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

421—

நல்லமங்களத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*4069— திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நல்லமங்களத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

@ இவ்வினா மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 7-4-1992 அன்று எடுத்துக் கொள்ளப் பெற்றது.